மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 9

பகுதி - 1

சுட்டெண் : ..... காலம் : 45 நிமி

- எல்லா வினாக்களுக்கும் விடைதருக.
- 1 – 40 வரையிலான வினாக்களுக்கான மிகப்பொருத்தமான விடையை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

கொடுக்கப்பட்டுள்ள உருவிற்கு மிகப் பொருத்தமான சொற்கூட்டத்தை தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

01. 

1. காலம், இயற்கை,காற்று
2. இசை,காற்று,சுருதி
3. செயற்கை,காற்று,மயக்கம்

02. 

1. பழங்கள், நரி, கொடி
2. கொடி, காய், குலை
3. நரி, குலை, இனிமை

03. அதிகாலைப்பொழுது எங்கும் இதமாக இருக்கும். இதில் கோடிடப்பட்டுள்ள சொற்களின் கருத்தைத் தரும் சொற்றொகுதியைத் தெரிக.

1. மாலை,விந்தை 2. காலை,குளிர்ச்சியாக 3. காலை,அழகான

04. கட்டத்தில் காணப்படும் எண்களின் பெறுமானத்திற்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

105 + 501 - 6 = 600


1. 303 x 2 2. 2 x 100 3. 305 x 302

05. 75 ÷5 X 2 = 30

1. 8 + 8 2. 10 - 5 3. 3 x 5

❖ கொடுக்கப்பட்டுள்ள வட்டவரைபை கவனத்திற் கொண்டு சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

இறப்பர் 75 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது



6. தென்னை பயிரிடப்பட்டுள்ள பிரதேசம் எத்தனை ஏக்கர்?

1. 100 2. 25 3. 150

7. தேயிலை பயிரிடப்பட்டுள்ள பிரதேசம் எத்தனை ஏக்கர்?

1. 200 2. 750 3. 100


PIRASANNA www.lkedu.lk

08.கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

1 4 3 8 5 12 7 ....

1. 14, 6 2. 16, 9 3. 13, 8

09.



1. 5, 10
2. 25, 10
3. 10, 10

❖ கீழுள்ள எண்களின் வரிசைக்கேற்ப தரப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு விடையைத் தெரிவுசெய்க.

1	3	5	7	11	12	13	14	15
ங்	ப	க	த்	ய	ம்	ர்	பி	த

10. 1, 7, 14, 12 ஆகியஎண்களுக்காக கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களாலான கருத்துள்ள சொல்.

1. பங்கம் 2. வங்கம் 3. தங்கம்

11. இந்தஎண் வரிசையிலுள்ள இரட்டைஎண்களின் கூட்டுத்தொகையின் கீழ் கோடிடுக.

1. 26 2. 55 3. 27


12. கமலின் வயது 15 வருடங்கள். நிமல் கமலைவிட 3 வருடங்கள் குறைந்தவர். விமல் நிமலைவிட 7 வருடங்கள் மூத்தவர். விமலின் வயதுஎத்தனை?

1. 12 2. 19 3. 10

13. 60m நீளமான வேலி ஒன்றின் இரு தூண்களுக்கு இடையிலான தூரம் 5mஆகும். இரு தூண்களுக்கிடையே இரண்டு பூச்சாடிகள் வீதம் வைக்கப்பட்டால் தேவைப்படும் பூச்சாடிகளின் எண்ணிக்கையாது?

1. 24 2. 26 3. 28

14.



இப்படத்திலுள்ள பென்சிலின் நீளம்

1. 12cm 2. 4 cm 3. 3 cm

15.



உருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை.

1. 6 2. 5 3. 7

PIRASANNA
www.lkedu.lk

❖ கீழுள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடையைத் தெரிக.

தையும் பிறந்து கும்மியடி–நீ
தரணி சிறக்கக் கும்மியடி
தை தை யென்றே கும்மியடி–நீ
தைப் பொங்கலன்று கும்மியடி.

16. "தைதை" என்பது

1. அடைமொழி
2. அடுக்குமொழி
3. இரட்டைக் கிளவி


17. "தரணி"எனும் கருத்தைத் தரும் சொல்.

1. வான் 2. பூமி 3. ஆகாயம்

18. "இறந்தது"என்பதன் எதிர்க்கருத்துசொல்.

1. சிறந்தது 2. பிறந்தது 3. மறந்தது

19.



மரக்குற்றியை ரேகைகளின் ஊடாக வேறுபடுத்தும்போது கிடைக்கும் கனக்குற்றிகளின் எண்ணிக்கை.

1. 9 2. 27 3. 18

20. இந்த மரக்குற்றியை சுற்றிவர நிறப்பூச்சு பூசப்பட்டபின் குற்றிகள் வேறுபடுத்தப்படும்போது ஒருபக்கமேனும் நிறம் பூசப்படாத குற்றிகளின் எண்ணிக்கை.

1. 1 2. 3 3. 6

21. வைத்தியசாலைக்கு நோயாளி என்பது போல பாடசாலைக்கு

1. ஆசிரியர் 2. அதிபர் 3. மாணவர்கள்

22. பனைக்கு நுங்கு எனின்

1. பலாவுக்கு முசு 2. மாவுக்குப் பிஞ்சு 3. வாழைக்குகாய்


❖ பொருத்தமற்ற உருவின் கீழ் கோடிடுக.

23.




A B C D


24. 1.



2.



3.



4.



PIRASANNA www.lkedu.lk

25.

1 

2 

3 

4 

26.

1. 

2. 

3. 

4. 

			கண்டி
		கொழும்பு	119
	களுத்துறை	24	
காலி	33	57	

27. இவ்வட்டவணையின் காலியிலிருந்து களுத்துறை, கொழும்பு ஊடாக கண்டிக்குள்ள தூரம் எவ்வளவு?

1. 119 2. 176 3. 143

28. இக்கடிகார முகத்தில் மணித்தியால முள்ளையும், நிமிடமுள்ளையும் வரையும்போது செங்கோணத்தை விட பெரிதாக அமையும் கோணத்தின் நேரம்.



1. 3.00 மணி 2. 3மணி 25நிமிடம் 3. 3மணி 45 நிமிடம்

❖ வகுப்பறையொன்றின் சில மாணவர்களின் உயரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

பெயர்	உயரம்
பாஞ்சாலி	125 cm
உமா	1.5 m
அகிலன்	1 m
தயான்	105 cm

29. இவர்களில் உயரத்தில் கூடியவர்.

1. தயான் 2. உமா 3. பாஞ்சாலி

30. இவர்களில் உயரத்தில் குறைந்தவர்.

1. உமா 2. அகிலன் 3. பாஞ்சாலி

31. பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

க	ரு	
த	வு	
ம	று	

1. தி, று,வி
2. வி, று,தி
3. று,வி,தி

RIRASANNA www.lkedu.lk

❖ **பின்வரும் விடுகதைகளுக்கான சரியான விடையைத் தெரிக.**

32. தீயாலும் சாவான், காற்றாலும் சாவான். அவன் யார்?

1. தீக்குச்சி 2. மெழுகுவர்த்தி 3. கற்பூரம்

33. அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமியாகும். அது என்ன?

1. தலைமுடி 2. சந்திரன் 3. யானை

❖ **இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிக.**

34. "இன்டர்நெட்"என்பதன் தமிழ்ப்பதம்.

1. இணையத்தளம் 2. மின்னஞ்சல் 3. இணையம்

35. கை,வா,போ - இவை தனித்தனியே பொருள் தருகின்றன. இச்சொற்களில் வந்துள்ள நிறுத்தற்குறிகள்

1. காற்புள்ளி, இடையீட்டுக் கோடு, முற்றுப்புள்ளி
2. காற்புள்ளி, முற்றுப்புள்ளி, வியப்புக்குறி
3. காற்புள்ளி, முற்றுப்புள்ளி, அடைப்புக்குறி

36. ஒலிம்பிக் கொடியில் காணப்படும் ஐந்து வளையங்களும் குறிப்பவை.

1. கண்டங்கள் 2. நாடுகள் 3. தீவுகள்

37. பொருத்தமற்ற சொற்கூட்டத்தைத் தெரிவுசெய்க.

1. சட்டை, சேலை, காற்சட்டை, மேற்சட்டை
2. மா, வாழை, தோடை, பலா
3. ரோசா, அரலி, நெல்லி, மல்லிகை

38. பருமனுக்கேற்ப ஏறுவரிசைப்படுத்தும் விடையை தெரிவுசெய்க.

1. எலி,பூனை,நாய்,சிங்கம்
2. சிங்கம்,நாய்,எலி,பூனை
3. நாய்,சிங்கம்,எலி,பூனை

39. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இப்பழமொழிக்குப் பொருத்தமான கருத்து

1. விடாமுயற்சி பலன் தரும். 2. பலசாலியும் தோல்வி அடைவான் 3. ஒற்றுமையே பலம்

40. உங்கள் சுட்டெண்ணை அடைப்புக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

சுட்டெண் ..... இது ஓர்

1. அறிவித்தல் 2. அறிவுறுத்தல் 3. விளம்பரம்

PIRASANNA www.lkedu.lk

மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 9

பகுதி - 11

சுட்டெண் : ..... காலம் : 1மணி 15 நிமி

✷ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து விடை எழுதுக.

கீழ்வானில் கதிரவன் ஒளிக்கதிர்களைப் பரப்பி அழகாகத் தோன்றினான். வெள்ளைப் புறாக்களைப் போல பள்ளிச் சிறார்கள் நிரைநிரையாக அங்குமிங்கும் சென்றனர். வீதியெங்கும் வாகனங்கள் நிறைந்து காணப்பட்டன.

1. பந்தியில் கூறப்படும் பொழுது யாது? .....
2. பெயரடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. .....
3. உவமானம் ஒன்றினைத் தருக. .....
4. அடுக்குமொழி சொல் ஒன்றை எழுதுக. ..... (1*4)

02. அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு கீழே உள்ள இடைவெளிகளைப் பூர்த்திசெய்து எழுதுக.

(தைமாதம், நூலகம், பூவிதழ், புவி)

1. மடக்கேறும் அரவும் கொண்ட சொல் .....
2. கீழ்க்காலும் சுழியும் கொண்ட சொல் ..... (1*2)

03. கீழுள்ள வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக.


1. That is a good idea - .....
2. Please give a piece of chalk - .....

04. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

நீங்கள் ஆயத்தமா? - .....

05. கீழுள்ள உருக்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.





....

06. கீழே உள்ள சொல் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

அதிபர் - .....

PIRASANNA
www.lkedu.lk

07. கீழுள்ள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

ஒவ் மம என்னமி - ..... (2*7)

08. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. எண்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா - .....

2. யார் துணையும் இன்றி தனித்து போராடி வெல்பவன் - .....

3. தாய் தந்தை இழந்தோர் - .....

09. பின்வரும் பழமொழிகளின் இடைவெளிகளை நிரப்பி எழுதுக.

1. ஏட்டுச் சுரைக்காய் .....

2. அஞ்சினவன் கண்ணுக்கு .....

10. இடைவெளி நிரப்புக.

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு
.....

11. இறந்தகால வினைச் சொற்களை எழுதுக.

1. நாம் கடந்த மாதம் சுற்றுலா .....

2. நீங்கள் நன்றாகப் பாடலைப் .....

3. நீ எனக்கு உதவி .....

4. அவை வானில் சுதந்திரமாக ..... (10*1)

12. நீண்ட காலத்திற்கு முன்பு எமக்குத் தூய, அழகிய ஒரு வீட்டுத் தோட்டம் இருந்தபோதிலும் இன்றோ கழிவுப்பொருட்களால் அது நிரம்பியுள்ளது. எனினும் நாம் அடிக்கடி பாடுபட்டு அழகிய தோட்டத்தை அமைக்க முயல்கிறோம். அழகிய வீட்டுத் தோட்டம் எனும் தலைப்பின்கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(எழுதப்படும் வாக்கியங்கள் ஐந்து சொற்களுக்கு மேல் இருக்க வேண்டியதோடு எழுவாய், பயனிலை இயைபுறவும் எழுத்துப்பிழை இன்றியும் அமைதல் அவசியம்.)

1. .....
.....

2. .....
.....

3. .....
..... (2*3)

13. சொற்களில் எழுதுக.


30705 - .....

PIRASANNA www.lkedu.lk

14. 2045, 3756, 5064, 4650 ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்தினால் அதில் முதல் எண், கடைசி எண் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசம் யாது? ஏறுவரிசை .....

    வித்தியாசம் - .....

15. தரப்பட்டுள்ள உருவில் $\frac{3}{5}$ ஐ நிழற்றுக.



16. தந்தையின் 40 ஏக்கர் காணியில் 28 ஏக்கர் காணியை அம்மாவுக்கும் மிகுதியை அண்ணாவுக்கும் தங்கைக்கும் சமமாக பங்கிட்டபின் அண்ணாவுக்கு கிடைத்த காணியின் அளவு யாது? .....

17. நிமிடத்திற்கு 20ℓ நீர் தாங்கியில் நிரம்புமாயின் 1000ℓ நிரம்ப எடுக்கும் நேரம் யாது? .....

18. ஒரு தேக்கரண்டி 5㎖ திரவம் கொள்ளும். 1 தேக்கரண்டி வீதம் நாளொன்றுக்கு மூன்று தடவை எடுப்பதற்கு 120㎖ அடங்கிய திரவ மருந்து எத்தனை நாளுக்குப் போதுமானது? .....

19. ஒரு அலுமாரியை செய்வதற்கு ரூ. 34200 பணம் செலவானது. மூலப்பொருளுக்கான செலவு ரூ.21550 எனின் செய்கூலி எவ்வளவு? ரூ.....

20. ஓர் வியாபாரி கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 13:50 மணிக்கு தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டு சென்றார். இலங்கையைவிட தாய்லாந்தின் நேரம் 2 மணி 30நிமிடங்கள் அதிகமாயின் 5 மணி நேரத்தின் பின் விமானப் பயணம் நிறைவடைகிறது. எனின் தாய்லாந்து விமான நிலையத்தில் கடிகாரம் காட்டும் நேரத்தை 24 மணி நேரத்தில் தருக. .....


21. விரிக்கப்பட்டுள்ள ஒரு புத்தகம் ஒன்றின் வலது பக்க எண் 201 எனின் அடுத்துவரும் வலது பக்கங்களின் 2 எண்களை முறையே எழுதுக. .....

22. நிமல் தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு 100 ரூபாவிலும், 30 ரூபாவை சேமித்தான். அவன் சேமித்த பணம் ரூ.300 எனின் அவனுக்குக் கிடைத்த பணத்தொகை யாது? ரூ.....

23. சுனில் கடையில் பேனை ஒன்றும்,புத்தகம் ஒன்றும் வாங்கினான். ஒரு புத்தகத்தின் விலை பேனை ஒன்றின் விலையைப் போல் 5 மடங்கு அதிகமாகும். ஒரு பேனையினதும், ஒரு புத்தகத்தினதும் மொத்த விலை 66 ரூபாவாகும். புத்தகத்தின் விலை யாது? ரூ.....

24. ச / த / ச / ப / ச என இலக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. அந்த இலக்கங்களைத் தரப்பட்டுள்ள எழுத்துக்களைக் கொண்டு தெரிவுசெய்க. (56556, 64664, 46454, 65648)

25. 3 500g தேயிலைத் தூளில் ஒரு கிலோகிராம் குறைவாக இருக்கும்போது 100 அளவுடைய எத்தனை தேயிலைத் தூள் பக்கற்றுகள் தயாரிக்கலாம்? .....

26. 

    உருவில் நீளத்திலும், அகலத்திலும் சம அளவுடைய 3 பெட்டிகள் காணப்படுகின்றன?

    உருவின் பரப்பளவு யாது? .....

27. மைதானமொன்றில் ஒரு வரிசையில் 6 மீற்றருக்கு ஒரு தூண் வீதம் 10 தூண்கள் நடப்பட்டுள்ளன. முதலாவது தூணிலிருந்து கடைசி தூண் வரையிலான தூரம் எவ்வளவு? .....

PRASANNA www.lkedu.lk

28. பின்வரும் இலக்க வரிசைக்கிணங்க இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.

0.2	0.4	0.6	0.8	

(16*2)

29 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

29. ஆணிவேர் அற்ற மரமொன்றாகும்.

1. பலா 2. தென்னை 3. ஈரப்பலா 4. ஆலமரம்

30. இலங்கையின் உயரமான மலை எனப்படுவது.

1. பேதுருதாலகால மலை 2. பம்பரகந்த 3. மகாவலி 4. சிவனொளிபாதமலை

31. உப்பளம் அமைந்துள்ள இடம்.

1. அம்பாந்தோட்டை – கண்டி 2. புத்தளம் - யால

3. அம்பாந்தோட்டை – புத்தளம் 4. புத்தளம் - குமண

32. தாவரமொன்று நீரை உறிஞ்சி வெளியேற்றும் பகுதி முறையே

1. வேரும் இலைகளும் 2. தண்டும் கிளைகளும்

3. தாவர இலைகளும் வேரும் 4. வேரும் தண்டும்

33. வெப்பமான வளி எப்பொழுதும்,

1. கீழே செல்லும் 2. குளிர்ச்சியாகும் 3. குறுக்காகச் செல்லும் 4. மேலே செல்லும்

34. நிலைக்குத்தை அளப்பதற்காக கொத்தன் பயன்படுத்தும் உபகரணம்.

1. தூக்குக்குண்டு 2. மட்டப்பலகை 3. நீர்மட்டம் 4. மணியாசு

35. எமது பண்டைய அரச குமாரர்களைப் பற்றிக் கேள்வியுறும்போது எமக்கு ஏற்படுவது.

1. அரசியல் உணர்வு 2. தேசத்துரோக உணர்வு

3. தேசாபிமான உணர்வு 4. துவேசம் சார்ந்த உணர்வு

36. ஈருருளியில் இல்லாத ஓர் பகுதியாவது.

1. பற்சில்லு 2. ஊதி 3. சங்கிலி 4. மணி

37. பாதுகாப்பற்ற உணவு உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்

1. அம்மைநோய் 2. வயிற்றோட்டம் 3. யானைக்கால் 4. கொப்பளிப்பான்

38. கலா வாவியைக் கட்டுவித்த மன்னன்.

1. தாதுசேனன் 2. மகாசேனன் 3. துட்டுகைமுனு 4. ராஜசிங்கன்

39. காந்தத்தால் கவரப்படாதது.

1. குண்டூசி 2. இரும்பாணி 3. இறப்பர் பட்டி 4. இரும்புத்தூள்

PIRASANNA www.lkedu.lk

40. திசைகாட்டி பயன்படுத்தாதவர்.

1. விமானி
2. மீகாமன்
3. ஆசிரியர்
4. பாலைவனத்தில் பயணம் செய்வோர்.

41. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்.

1. ஜோன் லோகி பெயார்ட்
2. குக்லி எர்மோ மார்க்கோனி
3. அலெக்சாண்டர் கிரஹாம்பெல்
4. ஐசக் நியூட்டன்

42. இலங்கையின் தேசிய விளையாட்டு.

1. கிரிக்கட்
2. கரப்பந்து
3. சடுகுடு
4. கூடைப்பந்து

43. வெடித்தல் மூலம் பரம்பலடையும் தாவரம்.

1. ஆமணக்கு
2. வேங்கை
3. மூக்குத்திப்பூண்டு
4. எருக்கலை

44. மிகப் பெரிய கோள்.

1. வெள்ளி
2. செவ்வாய்
3. வியாழன்
4. புவி

45. வாகனத் தளவாடியின் மூலம் பெறப்படும் பயன்.

1. முகம் பார்த்தல்
2. சுற்றுமுற்றும் பார்த்தல்
3. முன்னால் உள்ளவற்றைப் பார்த்தல்
4. பின்னால் உள்ளவற்றைப் பார்த்தல்


46. சூரிய நமஸ்காரத்தின் படிமுறைகள் எத்தனை?

1. 12
2. 13
3. 14
4. 15

47. காகத்தின் கூட்டில் முட்டையிடும் பறவை.

1. குயில்
2. கொக்கு
3. மஞ்சட் குருவி
4. மயில்

48. இப்பரிசோதனை மூலம் அறியப்படுவது.



1. பையினுள் நீர் உள்ளது
2. வளியில் நீர் உள்ளது என்பதை அறிந்துகொள்ளல்
3. சுற்றாடலில் நீர் உள்ளது என அறிந்துகொள்ளல்
4. இலை நீரை வெளியேற்றும் என்பதை அறிந்துகொள்ளல்

49. பொசுப்பேற்று உரம் தயாரிக்கும் பிரதேசம்.

1. எப்பாவல
2. புல்மோட்டை
3. நாவல
4. இரத்தினபுரி

50. பயிர்களை பிராணிகளிடமிருந்து பாதுகாப்பதற்கு நீரைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம்.

1. நீர்த்துப்பாக்கி
2. ஏணிவேலி
3. நீர்ப்பிசாசு
4. வெருளி

51. வித்து அகற்றி உண்ணும் உணவு.

1. வெண்டி
2. கத்தரி
3. சோளம்
4. மா

52. இலங்கையை ஆக்கிரமிப்பு செய்த மேலை நாட்டவர்.

1. ஒல்லாந்தர், ஆங்கிலேயர்
2. ஒல்லாந்தர், பாகிஸ்தானியர்
3. ஆபிரிக்கர், அமெரிக்கர்
4. அமெரிக்கர்

PIRASANNA www.lkedu.lk

53. இலங்கைப் பாராளுமன்றம் .....ஓயாவுக்கு அண்மையில் அமைந்துள்ளது.

1. தெதுரு 2. களனி 3. கலா 4. தியவன்னா

54. நெற்செய்கையின் போது வயல் வரம்புகளின் பயன்.

1. நீரைத் தேக்கிவைத்தலும், வெளியேற்றலும்
2. நீரைத் தேக்கிவைத்தலும் பிராணிகள் வராது தடுத்தலும்
3. வயலுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக
4. நெற்பயிர் வளர்வதற்கு

55. கீழுள்ள தாவர இலைகளுள் வடிவத்தால் வேறுபட்ட இலையாவது.

1. வெற்றிலை 2. மிளகு 3. வாழை 4. திப்பிலி

56. 'அத்தாங்கு' பயன்படும் தொழில்.

1. விவசாயம் 2. மீன்பிடி 3. தச்சுவேலை 4. ஆற்றுவேலை

57. "சங்கிலி புங்கிலி கதவைத் திற
நான் மாட்டேன் வேங்கைப்புலி" இது பாடப்படும் விளையாட்டு.

1. பசுவும் புலியும் 2. சடுகுடு
3. ஆடுபுலி ஆட்டம் 4. கிட்டிப்புள்ளு

58. தர்ஷன் புற்றரை மீது வீழ்ந்திருந்த பலகையை அகற்றினான். அப்போது புற்கள் மஞ்சள் நிறமடைந்து காணப்பட்டன. இதற்கு காரணம்

1. சூரிய ஒளி கிடைக்காமை 2. நீர் கிடைக்காமை
3. பசளை கிடைக்காமை 4. வளி கிடைக்காமை (30*1)

PIRASANNA
www.lkedu.lk